then it is present tense "வாசிக்கிறதுலெ"
If it means "just then" then it is "வாசிச்சதுலெ" past tense.

STUDY.

1. First we will read a passage out of ----
மொதலாவது நம்ம ....லெ-
இருந்து ஒரு பாகத்தை
வாசிப்போம்.

2. You read phraze by phraze and I will repeat it after you.
முடியாத (முத்துப்பெறாத) வாக்கியம்
ஒண்ணொண்ணு வாசி. நீ சொல்ல
சொல்ல, ஒனக்குப் பின்னுக்கு
நான் அதைச் சொல்லுவேன்.

3. Please read it out again.
தயவுசெஞ்சு அதை மறுபடியும்
வாசி.

4. Please read it very slowly.
தயவுசெஞ்சு அதை ரொம்ப
மெதுவா வாசி

5 Please read it very fast.
தயவுசெஞ்சு அதை ரொம்ப
வேகமா வாசி.

6. Please read it faster.
தயவுசெஞ்சு அதை இன்னும்
கொஞ்சம் ஜாஸ்தி வேகமா
வாசி.

7. Wait a minute (not literally, of course) and I will write that down.
கொஞ்சம் பொறு.
நானு அதை எழுதிக்கிறேன்

8. Please write that down.
தயவுசெஞ்சு அதை எழுது.

9. Have I said that correctly.?
நான் அதை சரியாச்-
சொல்லிருக்கேனா?

10 Each day I want to revise the work done the day before.
முந்துன நாளுலெ செஞ்ச
வேலையெ நான் ஒவ்வொரு
நாளும் திருப்பிச் செய்யணும்.

11 Please say ----- several times and I will repeat it after you.
தயவுசெஞ்சு .... ன்னு
ரொம்பத்தடவை சொல்லு. நீ
சொல்லச் சொல்ல நானு ஒனக்குப் பின்னுக்கு அதைச் சொல்லுவேன்

12. Please repeat that two or three times.

தயவு செஞ்சு ரெண்டு மூணு தரம் அதை திருப்பிச் சொல்லு.

13. Will you please repeat that.

தயவுசெஞ்சு அதைத் திருப்பிச் — சொல்லுவியா?

14. I know this by heart.

இது எனக்கு மனப்பாடமா தெரியும்.

15. I will learn this by heart before tomorrow.

நாளைக்கு முன்னெ நானு இதை மனப்பாடமா படிச்சிடுவென்.

16. I want you to teach me all the tunes you know.

ஒனக்குத் தெரிஞ்ச ராகத்தையெல்லாம் எனக்குப் படிச்சுக்குடுக்க (or) கத்துக்குடுக்க நான் பிரியப்படறேன்

17. Will you please explain -------.

தயவுசெஞ்சு நீயி (இதை) வெவரிப்பியா (or) வெவரமாச் — சொல்லுவியா?

18. Pleasecorrect me if ever I make a mistake.

தயவுசெஞ்சு, நான் எப்பவாவது ஒரு தப்பிதஞ் செஞ்சேன்னா என்னை திருத்து.

19. Do you know (a person) ?

அவன் or அவ, or அந்தப் புள்ளெ ஒனக்குத் தெரியுமா?

No. 13

Most of the future tense can be said in present tense and it means the same i.e. "சொல்றியா"

No. 16

விரும்புகிறேன் is the proper word. But colloquially we do not use it.

1 Does it mean that the action is completed ?
அந்த செய்கை முடிஞ்சிருச்சின்று அருத்தமாகுதா?

2. I do not understand (புரிஞ்சிக்கலை.)
"புரிஞ்சிக்கங்க" ன்றது எனக்கு வெளங்கலை.

3. There are three figures in this picture.
இந்தப்படத்லெ மூணு உருவம் இருக்கு.

4. Did you beat him only once ?
நீய் அவனை ஒரே ஒருதரமா அடிச்சை ?

5. No I beat him three or four times.
இல்லை. நானு அவனை மூணு நாலு தரம் (தடவை) அடிச்சென்.

6. I am sure that they will keep talking all the time.
எப்பப்பாத்தாலும் (எப்பவும், எல்லாநேரமும்) அவுங்க பேசிக்கிட்டேருப்பாங்கன்று -றது எனக்கு நிச்சயம்.

7. They kept throwing stones although I told them not to.
நான் அவுங்க~~ளுக்கு~~கிட்ட, கல்லெறியவாணும்ன்னு சொன்ன போதிலும், அவுங்க வந்து, எறிஞ்சுக்கிட்டேருந்தாங்க.

8. I have read that poem several times.
ரொம்பத்தடவை நான் அந்த பாட்டை வாசிச்சிருக்கேன்.

9. Can you come again tomorrow ?
மறுபடியும் நீய் நாளைக்கி வரமுடியுமா ?

10. I cannot do any Tamil tomorrow as I shall be busy (otherwise).
நாளைக்கி வேறெவேலை இருக்றதுனாலெ நானு தமிழ் ஒண்ணும் படிக்கமுடியாது.

---

(1) finished off
(2) ஆரம்பம்

(1) ... (6)

cf: ன்னு
ன்னுறது

6. Literally, for the sentence "I am sure" we have to say "நிச்சயமாய் இருக்கிறேன்" But Colloquially we do not say so.

once (4)
Three or four times (5)
several times (8)
} cf. order

4. Only once - not first.
object omitted

6. Adv. phrase, put first.

8. Adv: phrase. Quantitative

9. Two Adv: Order —
(i) Quantitative
(ii) Time.

10. cf. Order.
(i) clause (ii) Main Statement.
Common Adv: of time, put first.

௮௫.

11. He is a respectable man, but he is not educated.

அவென் ஒரு மரியாதிக்காரென். ஆனா அவென் படிக்கலை (அவனுக்கி படிப்பு இல்லை)

12. Have you heard the latest news about the war ?

சமீபத்லெ நடந்த சண்டைச்சங்கதி நீ கேட்டுருக்கியா ?

12. நடந்த — Completing verbal adj. — Position — Obj. — Pre. Subj.

13. The Germans have crossed the Rhine.

ஜெர்மன் காரனுக ரயினு ஆத்தை கடந்திருக்கானுக.

14. We must begin to study Tamil seriously.

நம்ம, தமிளை, கண்டிப்பா படிக்க — தொவங்கணும்.

We can use any of the six words for "Seriously"

ரொம்ப கவலையா
" உர்ச்சாகமா
" கருத்தா
" ஊக்கமா
" முஸ்திப்பா
" கண்டிப்பா

15. My pronunciation is very bad, that is ~~while~~ why I do not understand what people say to me.

என் உச்சரிப்பு ரொம்ப கேவலமாருக்கி.
அதுனாலெதான் ஆளுக வந்து எங்கிட்ட சொல்றது என்னான்னு ~~என்னு சொல்றாங்கன்னு~~ எனக்கி வெளங்கலை.

16. I want to practice pronunciation until I can speak just like a Tamil.

நான், சரி...ய்யா ஒரு தமிளனைப்போல பேசுவரைக்கும், உச்சரிப்பை பளகணும்.

17. What time will you be able to come ?

என்னேரம் நீய்யி வரமுடியும் ?

18. I am going to Malabar for a few days.

கொஞ்ச நாளைக்கி நானு மலையாளத்துக்குப் போறேன்.

19. Please describe this tree, in Tamil.

தயவுசெஞ்சு இந்த மரத்தை தமிளுலெ வெவரி.

STUDY.

-----

1. I know him quite well.

(a) அவென் எனக்கு ரொம்ப நல்லா தெரியும். (Defective verb takes "dative")

(b) நான் அவனெ நல்லா அறிவேன்
This is less used than (a)

2. I know the book you speak of.

நீ சொல்ர பொஸ்தகத்தைப்பத்தி எனக்குத் தெரியும்.
(literally: பேசுர, but this is less used)

3. I once had a copy of it.

ஒருதடவை நான் அதுக்கு ஒரு நகலு வச்சிருந்தென்.

4. He knew the whole of that poem but did not understand it.

அந்தப்பாட்டு பூரா அவனுக்குத் தெரியும். ஆனா அது அவனுக்கு வெ(ளி)ளிங்கலை.

5. I did not understand ......

....எனக்கு வெ(ளி)ளிங்கலெ

6. I do not understand what you have just said.

இப்ப நிய்யி சொன்னது, எனக்கு வெ(ளி)ளிங்கலை.
(Sound இப்ப for "Just" should be emphatically pronounced)

7. I understand that.

அது எனக்கு வெ(ளி)ளிங்குது.

8. I did not understand that.

அது எனக்கு வெ(ளி)ள்ங்கலை.
Present & Past tenses are the same in this, unless it points out something habitual when it will be "வெளங்குரதில்லை"

9. Does it mean that ------

----ன்னு அருத்தம்?

10. A. ... means ...

86.

10. What does ----- mean ?

----- என்னு அருத்தம் பண்றது.....

11. Does ----- mean ----- ?

......இப்பிடி, அப்பிடி, அதை, or இதை அருத்தம் பண்றது.....?

12. Look at this picture.

இந்தப் படத்தைப் பாரு.

13. What is he doing.?

அவென் என்னு செஞ்சுக்கிட்டிருக்கான்.

14. Tell me what you see in the picture.

படத்லெ நிய்யி என்னு பாக்றேண்ணு எனக்குச் சொல்லு.

15. I understand what you have just said.

இப்....ப நிய்யி சொன்னது எனக்கி வெ(ள)ளங்குது.

16. But you have just told me that ----- .

ஆனு, ... ~~இப்பத~~ ண்ணு, இப்பத்தான் நீ சொன்னெ.

17. Can ------ mean ----- ?

----- அப்பிடி or இப்பிடி அருத்தப்படு ....
in case of neuter or "அருத்தப்படுத்து......" or
"அருத்தம் பண்றது....." in case of persons

18. Can we say ----- in colloquial Tamil ? ....ண்ணு கொச்சை தமிழுலெ நம்ம சொல்ல முடியுமா?

Nos. 10 & 11 More literal.

Colloquialism

What does he mean by [...]?

இதுனாலெ அவென் உத்தேசம் என்ன.
or
அவென் இப்பிடி செய்றதுக்கு அருத்தம் என்ன?

Nos. 15 & 16.

There are three things to note in these.

(1) "Just" is to be but emph[...]

(2) No. 16. is more emphatic than 15, since it particularises the time "only now" So "தான்" used.

(3) Because it means "within a few seconds or minutes" we are using plain past tense and not the present perfect tense like English which would mean "Very much earlier" or at least not "just then"

STUDY.

see P. 8
I am using here non-honorific நீயி.
This will be alright if it is a child. But when we deal with grown-up ones, then we have to use நீங்க.
This does not include Domestic or menial servants.

1. Can you get the book for me in the bazaar ?

கடையிலெ எனக்கு அந்த பொஸ்தகத்தை, ஒன்னாலெ வாங்கமுடியுமா ?

2. Will you please take the book now and read the Tamil.

தயவு செய்து இப்ப நீயி அந்தப் பொஸ்தகத்தை - தை எடுத்து, தமிளெ வாசிப்பியா ?

3. We will finish the chaptpr.

நம்ம அந்த அதிகாரத்தை முடிப்போம்.

4. That is enough for today.

இன்னைக்கி அது போதும்.

It is more natural to say அம்புட்டுப் போதும்.

5. Tomorrow we will read ----

நாளைக்கி நம்ம வாசிப்போம்.
கி

6. How many chapters have we feft ?

எத்தினை அதிகாரத்தை நம்ம விட்டுருக்கிறோம்.

எனக்குத் தெரியாது is rather abrupt
எனக்குத் தெரியலெ more polite.

7. What is the meaning ofthis word ?

இந்த வார்த்தைக்கி அர்த்தம் என்னா ?

8
I have avoided தெரியாது. The tone of it sounds harsh. தெரியலெ sounds polite. I think this needs an explanation which I shall do personally.

8. I do not know the meaning of தோத்ரம்

தோத்ரம்ன்ற x து......க்கி அர்த்தம் எனக்குத் தெரியலெ.

9. You keep saying something that sounds like மகராசனுகு

மகராசனுகுன்னுர சத்தம் மாதிரி சொல்லிக்கிட்டே ருக்கிற

X. I just discovered one thing.
Nouns ending in sound ன take க்கி for Dative Case
" " " உ " க்கு " " "

If we use "அருத்தம்பிரி" then we can have "accusative" or "objective" case when வாக்கியம் becomes வாக்கியத்தை in place of "வாக்கியத்துக்கு"

87.

10. Please translate that sentence.

தயவு செஞ்சு அந்த வாக்கியத்துக்கு அருத்தஞ் சொல்லு. (or அருத்தம்பிரி)

11. Now I will translate this passage.

இப்ப நானு இந்தப் பாகத்துக்கு அருத்தஞ் சொல்லுவென். (or அருத்தம் பிரிப்பென்) (do not learn)

Explain

12. Is that a good translation ?

அது ஒரு நல்ல அருத்தமா ?

13. Please translate the English into Tamil.

தயவு செஞ்சு இங்கிலீசுக்கு தமிளருத்தஞ் சொல்லு

Speaking like this is more natural. But there are two other forms in the literal point of view. x.

14. Please translate the Tamil into English.

தயவு செஞ்சு தமிளுக்கு இங்கிலீசருத்தஞ் சொல்லு.

15. Please copy out this passage.

தயவு செஞ்சு இந்தப் பாகத்துக்கு ஒரு நகலு எடு (நகலெடு)

Dative + not Acc:

16. Please copy it out neatly,

தயவு செஞ்சு ரொம்ப சுத்தமா அதுக்கு நகலெடு.

We do not generally use "accusative case" for "Copying"

17. Write it in pencil, not in ink.

மையிலெயில்லெ. அதெ பென்சிலுலெ எளுது.

18. Can you lend me your pencil. I have lost (mislaid) mine.

× கொஞ்சம் Substitutes the meaning for "Lend"

ஒம் பென்சலை எனக்குக் கொஞ்சம் × குடுக்க முடியுமா? என்னதை காணாமப் போட்டுட்டென். எங்கெயோ வச்சுட்டென்.

19. Could you make a copy of this .

நீங்க, இதுக்கு ஒரு நகலு எடுக்க முடியுமா ?

P.S.

Very unfortunately the Noun-Translation & Verb-Translate seem to be the hardest words. Although they have the literal meaning as Noun-மொழிபெயர்ப்பு Verb-மொழிபெயர் They are not colloquially used.

No. 10 & 11 with a round-about word "அருத்தம்பிரி" are nearly correct, but No. 12 is the worse. We cannot say அருத்தம்பிரிப்பு Nor மொழிபெயர்ப்பு and hence, using அருத்த[ம்] which is not wrong anyway.

× இங்கிலீசை தமிளுலெ அருத்தஞ் சொல்லு.

இங்கிலீசெ தமிளுலெ [illegible] அருத்தஞ் சொல்லு

From 10 — 14. Even educated people do not use the word மொழிபெயர்[ப்பு]

Please note that the things I have written in the margin this time, are not what I have invented to fill the papers, but they are The words spoken by an average Tamilian irrespective of education or civilization. I feel myself that I cannot talk anything else than this.

1. Next week I must practivetalkig

Tamil for a little time eaah day.

அடுத்த வாரத்லெ ஒவ்வொரு நாளைக்
-குள் கொஞ்சங்கொஞ்சம் நேரம்
நானு தமிழு பேசப்பழகணும்.

2. Only by constant listening wi

you learn to understand Tamil correctly.

அடிக்கடி தமிழு பேசுறதை கேக்கிறது
-னாலெ, தமிழு நல்லா வெளங்கி~~க்கு~~
-றாப்லெ படிச்சிக்கிலியா ?

3. It is necessary to under-

stand the exact force of each syllable.

ஒவ்வொரு அச்சரத்துக்கும் என்ன
(காரம்) காட்டம் இருக்குதுன்னு அறியிறது
ரொம்ப அவசியம்.

4. Have I enough shirts ?

போதுமான கமிசுக எனக்கிருக்கா?
(ஏங்கிட்டருக்கா)

5. No sir ! They are all worn

out.

இல்லிங்கையா. அதெல்லாம்
நஞ்சு போச்சுங்க.

6. Tell the ~~dailro~~ tailor to

come on Monday and bring some patterns

for shirts.

தையக்காரெங்கிட்ட திங்கக்கிளெ
மெக்கி வரச்சொல்லு. அப்பிடியே
கொஞ்சம் மாதிரித்துணியும் கொண்டாரச்சொ
-ல்லு

7. What is the price of this ~~/~~

stuff a yard ?

இது வந்து, கெஜம் என்ன வெலெ.

8. How many yards are required

for a suit ?

ஒரு கால்சட்டைக்கும் சட்டைக்கும்
எத்தினை கெஜம் வேணும்?

9. I do not like this pattern.

It is too bright.

இந்த மாதிரித்துணி எனக்குப் பிடியல்லெ.
இது ரொம்ப வெளுத்திருக்கு.

10. Do you think these two

colours will go together.

இந்த ரெண்டு நெறமும் ஒன்னாருக்கும்
-ன்னு நெனெக்கிறியா ?

11. I want something in grey.

சாம்பல் நெறத்துலெ எனக்கு என்னமா
-வது ஒன்னு வேணும்.

12. Is there ~~a~~ any man who can mend the lid of the tea-pot which I broke ?

நான் ஒடைச்ச தேயிலைப்பாத்திரத்தை ஒட்றதுக்கு ஆராவதிருக்காரா ?

13. What does he ask for doing it ?

அதைச் செய்யிறதுக்கு, அவென் என்னு கேக்கிறான் ?

14. I told you I had paid the money.

பணங்குடுத்துட்டேன்ன்னு ஒங்கிட்ட நான் சொன்னென்.

15. I said that he ran away.

அவென் ஓடிட்டான்னென்.

16. I said that you beat her.

நீயி அவளை அடிச்சேன்னென்

17. I said that they bought that bull.

அவுங்க அந்த காளையெ வாங்கினாங்கன்னென்.

18. Did you say that you ran away ?

நீயி வந்து, ஓடிட்டேன்னியா ?

19. Did you say that they beat her ?

அவுங்க அவளை அடிச்சாங்கன்னியா ?

20. You said that he borrowed the money.

அவென் பணம் கடென் வாங்கினான்னெ.

21. He said that I did not pay him.

~~அவெ~~ அவனுக்கி நான் பணங்குடுக்கலெ—ன்னான்.

22. He said the dog bit him.

நாயி அவனெ கடிச்சிடுச்சின்னான்.

23. He says that the villagers have come.

ஊருக்காரு வந்துட்டாங்கன்றான்.

1. Do you think your father will come ?

ஒங்கப்பென் வருவான்ன்னு
நிய்யி நெனைக்கிறியா ?

2. I think he will repay the debt.

அவென், கடனெ அடைச்சி
ருவான்ன்னு நான் நெனைக்கிறென்

3. They think that it will rain.

மளெ பேயும்ன்னு, அவுங்க
நெனைக்கிறாங்க.

4. They expect that their father will return tomorrow.

அவுங்கப்பென் வந்து, நாளெக்கி
திரும்பி வந்துருவான்ன்னு
அவுங்க எதிர்பாக்கிறாங்க.

5. I expect that he will tell you all about it.

அதெப்பத்தி யெல்லாம் அவென்
ஒங்கிட்ட சொல்லுவான்ன்னு
நான் எதிர்பாக்கிறென்

6. I hope he will go to Madras.

அவென், பட்ணத்துக்குப் போ-
-வான்ன்னு நம்புறென்.

7. I expect to see him soon.

சீக்ரத்லெ அவனெப் பாப்-
-பேன்ன்னு நெனைக்கிறென்

X எதிர்பார் = Expect is avoided where possible.

8. I hope to repay you at an early date.

கூடிய சீக்கிரத்லெ நான்
ஒன் பணத்தெ குடுத்துருவேன்-
-ன்னு நம்புறென்.

9. They hope to become rich.

அவுங்க பணக்காறராயிருவா
ங்கன்னு நம்புறாங்க.

10. I asked him whether he knew my elder brother .

எங்கண்ணென் அவனுக்கு தெரி-
-யுமான்னு கேட்டென்.

11. I asked who had given him the money.

அவனுக்கு பணங்குடுத்தது ஆருன்னு கேட்டேன். (விசாரிச்சேன்)

12. I asked which of the two men was the elder.

அவங்க ரெண்டுபேத்துலெ ஆரு மூத்தவென்னு கேட்டேன். (விசாரிச்சேன்)

13. He asked what I wanted.

எனக்கு என்ன வேணும்ன்னு கேட்டான்.

14. He asked where they had taken his cow.

அவெம்பசுவெ, அவங்க எங்கெ கொண்டு-போனாங்கன்னு, கேட்டான் (விசாரிச்சான்)

15. He asked who was the village headman.

ஊருத்தலெயாரி ஆருன்னு விசாரிச்சான்.

16. They asked me how to play that game.

அந்த வெளாட்டை எப்பிடி வெளாட்றதுன்னு (ட) அவங்க என்னியெ கேட்டாங்க.

15. They asked him which bull was his.

அவெங்காளெ எதுன்னு அவங்க வந்து அவனைக் கேட்டாங்க.

18. They asked me whether I knew him.

அவென் எனக்குத்தெரியுமான்னு, அவங்க என்னியெ விசாரிச்சாங்க.

19. I asked him how to tie the rope.

கயித்தை எப்பிடி கட்றதுன்னு, நான் அவனைக் கேட்டேன்.

20. He asked if the headman had come.

தலெயாரி வந்துட்டானான்னு, அவெங் கேட்டான்.

21. They told him to bring the plough

அவெங்கிட்ட, கலப்பெயெக் கொண்டார ச்சொன்னாங்க.

‡ How does one apply this proverb in conversation.

சம்பாஷணையிலே ஆராவது
ஆனு இந்த பழமொழியை
எங்கெடுத்துலெ சொல்லுவாங்க

‡ 1. What is the action that சொருண்டு describes?

சொருண்டு—னா வாய்ந்தெ
வெளக்கிறது என்னு சொல்லுங்க?

‡ 2. Please draw it on this paper.

தயவு செஞ்சு அதெ இந்த
காகிதத்துலெ வரெங்க.

3. Please show me.

தயவு செஞ்சு எனக்கு
காமிங்க.

காமிங்க or காட்டுங்க have the same meaning. காட்டுங்க is, perhaps, better.

‡ 4. Please go through the movement.

~~செய்யிற காரியத்தெ~~
~~பாருங்க.~~

அது என்ன செய்கின்னு
காட்டுங்க.

‡ 5. What is the exact meaning of சொனெ?

சொனக்கி (சொனண்ணதுக்கி)
சரியான அர்த்தம் என்ன?

‡ Implies noted in note book.

STUDY

ǂ 6. கிளை means "Branch"
கிளைன்றதுக்கு அர்த்தம் Branch

ǂ 7. Why do they say
வலை கம்பி?
வலைக்கம்பின்னு அவங்க
ஏன் சொல்றாங்க

ǂ 8. Never allow me to say
anything wrong without
correcting it.
எப்பவும் தப்பிதமா சொன்னியே
ஒண்ணுங் சொல்ல விடறாதிங்க.

ǂ 9. If I ever make a mistake
please always correct me.

நான் எப்பமாவது ஒரு
தப்பிதம் செஞ்செண்ணு
~~[illegible]~~ தயவு செய்து
சொல்லியே எப்பவும்
திருத்திருங்க.

10. அவன் இருந்ததுக்கும் போனதுக்கும்
இவ்வளவு கஷ்டப்படுறானே!
= நல்லாயிருந்ததுக்கும் - has போனதுக்கும்
has no meaning. Once he
prospered; now he is (unexpectedly)
in great trouble.

ǂ

‡ 1. I intend to speak to him about it.

அதைப்பத்தி, அவெங்கிட்ட
பேசணும்ணுருக்கிறேன்.

‡ 2. He decided not to sell his house.

வீட்டை விக்கக்கூடாதுண்ணு
தீர்மாணம் பண்ணுனான்.

‡ 3. I expect I shall see them soon.

[கூடிய] சீக்கிரம்மா அவுங்களை
பாப்பேண்ணு நெனைக்கிறேன்.
(We do not generally use "expect" in this connection)

‡ 4. He did not dare to abuse me.

என்னியை திட்ரதுக்கி (வையிரதுக்கி)
அவென் துணியலை.

5. I have decided not to buy the house.

வீடு வாங்கக்கூடாதுண்ணு
தீர்மானம்பண்ணிருக்கேன்.

‡ 6. He determined to pass the examination

பரிச்சையிலெ தேறணும்ணு
தீர்மானம் பண்ணுனான். or
(மனசு வச்சான்)

‡ 7. He tried not to lose his temper.

கோவத்தை அடக்கிறதுக்குப் பாத்தான்

7. B. We have packed all the books in this box.
இந்தப் பொட்டிக்குள்ளை பொஸ்தகத்தை
யெல்லாம் அடக்கியிருக்கோம்

‡ 8. He intends to give her nothing.

அவளுக்கி ஒண்ணும்,
குடுக்கக்கூடாதுண்ணுருக்கிறான்.

‡ 9. I hope to see him soon.

சீக்கிரத்தலை அவனைப் பாப்பேண்ணு
நம்புறேன்.

‡ Indicates, noted in note-book.

I ~~t~~intend not to buy the cow.

பசுவை வாங்கக்கூடாதுன்னு
-இருக்றேன்.

I intend not to go to his house .

அவென் வீட்டுக்கிப், போகக்கூடாது
-ன்னுருக்றேன்.

but I have decided that he must not go to the house.

அவனை, வீட்டுக்கு etc.

They decided not to punish the boy.

பையனை தண்டிக்கக்கூடாதுன்னு,
தீர்மானம் பண்ணுனாங்க.

I decided that I would not plant
rose trees.

ரோசாச் செடிகளை நடக்கூடாதுன்னு
தீர்மானம் பண்ணுனேன்.

We intend to go for a ride tomorrow.

நாளைக்கி சவ்வாரி செய்யணும்ன்னு
- இருக்றோம்.

‡ I do not wish to see him.

எனக்கு, அவனைப்பாக்க—
பிரியமில்லை.

‡ I object to doing that.

அதைச்செய்யிறதை, நான்,
தடுக்கிறேன்.

They intended to repay the lender.

கடனைத் தீக்கணும்ன்னுருந்தாங்க.

} This is not literal translation.

‡ Indicates, noted in note-book.

When 1, 2, 3, 4,
while 8, 10
Since 5, 6
immediately 9.
9

1. When they beat him he cried out.
அவுங்க அவனை அடிச்சபோது, அவென் சத்தம்போட்டு அளுதான்.

2. I saw the gentleman when he arrived at the office.
தொரை ஆபீசு வந்து சேந்தபோது, நான் அவரைப்பாத்தென்.

3. Tell me when he returns to his house.
அவென், வீட்டுக்கு திரும்பி வர்ற-போது, எங்கிட்டச் சொல்லு

4. Get up when the sun rises.
பொளுது பொறப்புட்ர போது, எந்திரிச்சுடு.

5. I have not seen him since he built his house.
அவென் வீடுகட்னதுலெருந்து, நான் அவனைப்பாக்கலை

‡ 6. I have not seen her since she was married.
அவ வாக்கப்பட்டதுலெருந்து, நான் அவளைப் பாக்கலை.

7. Do not punish him without ~~#~~warning.
மொதல்லெ எச்சரிக்காமெ, அவனைத் தண்டிக்காதெ.

8. While the cat is away the mice will play.
பூனை (இல்லாட்டி) இல்லாத நேரத்லெ சுண்டெலிகளுக்கு கொண்டாட்டம்.

‡ 9. Pay him immediately he asks you.
அவென் ஒன்னியெ கேட்டவொடனெ அவனுக்கு காசுகுடுத்துடு.

பேசிறாதெ is more emphatic –
10. Dont talk to me while I am reading.
நான் வாசிச்சுக்கிட்டுருக்கெயிலெ எங்கிட்ட பேசாதெ

11. While I was working he was idling.

நான் வேலை செஞ்சுக்கிட்டுருக்கையிலெ
அவென் சோம்பேறித்தனமாருந்தான்.

12. I ran away before they reached the house.

அவுங்க, வீடு வந்து சேருமுன்னெ,
நான் ஓடிப்போய்ட்டேன் (ஓடிட்டேன் too Colloquial)

13. Wait until he comes here.

அவென் இங்கெ வர்றது வரைக்கிலும்,
நிய்யி காத்திரு.

14. Even After I paid him he waited about.

நான் அவனுக்கு பணங்குடுத்தப்பெறகும்,
சும்மா வீட்டைச்சுத்தி, காத்துக்கிட்டுந்தான்

15. After they paid him he went away.

அவுங்க, அவனுக்கி காசு குடுத்தப்பெறகு,
அவென் போய்ட்டான்.

I 16. Immediately they went there he attacked them.

அவுங்க அங்கெ போனதும், அவென்
அவுங்களை எதித்தான்

17. After you have finished the work I will pay you.

நிய்யி வேலையெ முடிச்சப்பெறகு,
~~நான் ஒனக்கு காசு குடுப்பேன்~~ ஒனக்கி காசு குடுக்றேன்

18. Before I could catch him he jumped out of the window.

நான் அவனை புடிக்கிறதுக்கு முந்தி,
சன்னல்வளி தவ்விட்டான்

19. He lived there until he died.

சாகுற வரைக்கிலும், அவென்
அங்கெ குடியிருந்தான்.

20. After they had dined they discussed business.

சாப்புட்டப்பெறகு, அவுங்க வந்து,
யாவாரத்தைப்பத்தி கலந்து பேசுனாங்க.

21. He read until I fell asleep.

நான் நல்லா தூங்குற வரைக்கிலும்,
அவென் வாசிச்சான்.

22. After I have bought the cow I shall go home.

நானு, பசுவை வாங்குனப்பெறகு,
வீட்டுக்குப் போவேன்.

23. Before I pay you anything you must finish the work.

ஒனக்கி நானு காசென்னமும் குடுக்குறதுக்கி
முந்தி, நிய்யி, வேலையை முடிச்சுரணும்.

24. After I had slept for a while I suddenly woke up.

கொஞ்சநேரம் தூங்குனப்பெறகு, இருந்திருந்தாப்லெ முளிச்சுக்கிட்டேன்.

After he comes you may do what you please.
அவென் வந்தப் பெறகு ஒன் இஷ்டப்படி செய்யலாம்.

~~Thid-blankry~~ This blanket is very thin.
இந்த கம்பிளி ரொம்ப மெல்லிசாருக்கு.

The ground is very hard.
தரை ரொம்ப கெட்டியாருக்கு.

Hard ground.
கெட்டித்தரை

The grass is dry.
பில்லு காஞ்சருக்கு.

Dry grass.
காஞ்ச பில்லு

The river is wide.
ஆறு அகலமாருக்கு

A wide river.
ஒரு அகலமான ஆறு

The stream is shallow.
நீரோடை ஆளமில்லாமெருக்கு

A shallow stream.
ஒரு ஆளமில்லாத நீரோடை

Go where I tell you.
நான் சொல்ர எடத்துக்குப் போ

I walked where the path was most even.
மேடு பள்ளம் இல்லாமெ, ரொம்ப மட்ட மாருக்கிர பாதெயிலெ, நான் நடந்தென்.

The lake is full.
ஏரி நெறைஞ்சிருக்கு.

Keep silent until I speak to yoy.

நான் ஒங்கிட்ட பேசுறது வரைக்கும் சும்மாரு.

The bundle is light.

மூட்டை லேசாருக்கு

A light bundle.

ஒரு லேசான மூட்டை

The (surface of the) ground is rought.

மேல்த்தரை கரடுமொரடாருக்கு

Rough ground.I

கரடுமொரடான தரை

I did nothing until he came.

அவன் வர்றது வரைக்கும்
நான் ஒன்னும் செய்யலை

Do you spell this word with a   or a

இந்த வார்த்தையை ......ன்னு எழுத்துக்கூட்டறியா ?
இல்லாட்டி ....ன்னு எழுத்துக்கூட்டறியா ?

A dirty cloth, knife.

ஒரு அழுக்குத்துணி — கத்தி

The cloth is dirty.

துணி அழுக்காருக்கு

A heagy load on the cart.

வண்டியிலை ஒரு கனமான பாரம்.

The load is heavy.

பாரம் கனமாருக்கு

The knife is blunt .

கத்தி மொட்டையாருக்கு

A blunt knife.

ஒரு மொட்டைக்கத்தி.

அவனெப் பாக்கறமெருக்கறப்லெ
நான் வெளியெ வந்துட்டென்

1. I came away so that (= in order that) I should not see him.

அவனெப் பாக்கக் கூடாதுண்ட்டு
நான் வெளியெ வந்துட்டென்

2. They tied him to the post so that (= in order that) he should not escape.

அவென் தப்பிச்சிறக் கூடாதுண்ட்டு
அவனெ தூணுலெ புடிச்சுக் கட்டிட்டாங்க

3. He bribed the Tahsildar so that (= in order that) his complaint might not be dismissed.

அவென் பிராது தள்ளுபுடியாயிறக்
கூடாதுன்னு தாசில்தாருக்கு
அவென் லஞ்சங் குடுத்தான்.

4. Whatever you do he will blame you

நீ என்ன செஞ்சாலுஞ்சரி.
அவென் ஒன்மேலெ கொறெ சொல்லுவான்

5. Whoever did this is wrong.

இதெ ஆரு செஞ்சாலுஞ்சரி.
தப்பிதமாத்தான் ருக்கும்.

6. Whenever I come here I see him.

நான் வாரபோதெல்லாம் அவனெப் —
பாக்கறென்.

7. Wherever he goes there is trouble (disturbance)

அவென் எங்கெ போனாலுஞ்சரி.
தொந்தரவுதான்.

8. You may have whichever you prefer.

~~இதெ~~ ஒனக்கு எது பிரியமோ அதெ
எடுத்துக்கிறலாம்.

9. He reads rather well.

அவென் கொஞ்சம் நல்லா வாசிக்கிறான்

10. Please give me some lessons.

தயவு செஞ்சு எனக்கு கொஞ்சம்
பாடம் படிச்சுக் குடுங்க.

11. I have bought some plantains.

நான் கொஞ்சம் வாழைப்பழம்
வாங்கியிருக்கென்.

12. Some of these cattle are valuable

இதுலெ ~~[illegible]~~ ஒவ்வொரு
மாட்டுக்கு வெலெ ஜாஸ்தி

13. Some of these boys are naughty.

இந்தப் பையனுகள்ளெ ஒவ்வொரு-
த்தென் அடப்பயலாருக்கான்

14 Someone spoke to me in the bazaar.

ஆரோ ஒருத்தென் கடையிலெ
என்கிட்ட பேசினான்.

15. Have you any rice.
ஒங்கிட்ட அரிசி என்னமெழ் இருக்கா?

16. Anywhere you may go.
எங்கெண்ணாலும் நீய்யி போகலாம்

17. Is there anyone in the house.
வீட்லெ ஆரும் இருக்காங்களா?

18. Something struck him on the head.
அவென் தலெயிலெ என்னமோ தட்டுச்சு.

The following with

19. Do not touch that.
தயவு செஞ்சு அதை தொடாதீங்க

20. Do not speak to him.
அவெங்கிட்ட பேசாதீங்க

21. Do not move, or I will kill you.
அசையாதீங்க. இல்லாட்டி கொண்ணுடுவென்

22. Do not look round.
சுத்தியும் முத்தியும் பாக்காதீங்க.

The above four ensentences in the honorific form.

~~23~~
தயவு செஞ்சு அதைத் தொடாதெ

~~24~~
அவெங்கிட்ட பேசாதெ.

~~25~~. அசையாதெ. இல்லாட்டி கொண்ணுடுவென்
சுத்தியும் முத்தியும் பாக்காதெ

~~26~~.

Wanted a few examples of the negative participle in -ஆமல்.

27. வெளக்கெ பாக்காமெ
வீட்டுக்கி வந்துட்டான்..

28. சாப்டாமெ வேலெக்கி
போயிட்டான்

29. பணமில்லாமெ
கஷ்டப்பட்றான்.

1. Here is a box.

இங்கெ ஒரு பொட்டியிருக்கு.

2. See ! I lift the box on to the table.

இந்தா. இந்தப் பொட்டியெ மேசைமேலெ தூக்கி வக்கிறென்.

3. Then I take a bunch of keys out of my pocket and select the key of that box.

அப்பறம் ஜேப்பாக்கெட்டுலெருந்து ஒரு கொத்துச் சாவியெடுத்து இதுக்குச் சேர்ந்த சாவியெ எடுக்கிறென்.

4. I unlock the box, open it and rest back the lid.

நான் பொட்டியெத் தொறந்து அதொடைய மூடியெ நிக்கவெக்கிறென்.

5. You see the lid has supports so that it will stand upright.

மூடி வந்து சாயாமெ நிக்கிறதுக்கு அதுக்கு கீலுகளிருக்கு — பாரு !

6. Inside the box ~~is~~ are a piece of india-rubber, a piece of sealing-wax and a couple of pencils.

பொட்டிக்குள்ளெ ஒரு ரப்பரும், ஒரு அரக்குத் துண்டும் ரெண்டு பென்சலுமிருக்கு.

7. There is also a leather case containing postage stamps.

டாம்பு வைக்கிற தோலு பையி ஒண்ணுமிருக்கு.

8. Now I want to send off this letter.

இப்ப நானு வந்து இந்த கடிதத்தெ அனுப்பணும்.

9. First I will wet the flap on the front of the envelope and stick it down.

மொதல்லெ, முன்பக்கத்துலெ கவருக்கொடெ மடிப்பெ நனைச்சு அதெ ஒட்டுவென்.

10. Then I take a one anna stamp out of the case and stick it on the back of the envelope at the right hand top corner.

அப்பறம் வந்து பையிலெருந்து ஒரு அணா டாம்பெடுத்து பின்பக்கத்துலெ சோத்துக்கையிப் பக்கம் மேமூலெயிலெ ஒட்டறென்.

11. I must be careful to place the stamp on the right way up.

சோத்துக்கையிப் பக்கம் மேமூலெயிலெ, சரி...ய்யா
ஒட்ரதுக்கி நான் ஜாக்ரதெயா இருக்கணும்.

12. Next I will seal the flap of the letter. to prevent it from being opened before it reaches its destination.

அது எங்கெ போயிச் சேருதோ, அங்கெ
போர்துக்குள்ளெ அதும் தொரந்துராமெ
நான் அந்த மடிப்புலெ வந்து முத்திரெ வைக்கணும்

13. You will see that I first light a candle and hold the wax in the flame. until it melts.

இங்கெ பாரு. மொதல்லெ நானு மெழுகுவத்தியெ
கொளுத்தி அரக்கி உருகுரவரைக்கும் அதெ
நெருப்புலெ காட்டுவென்.

14. As it melts the wax burns a little.

அது உருகுர போது, அரக்கி கொஞ்சம் எரியுது.

15. Before the burning wax drops, I transfer it to the flap of the envelope.

எரியிர அரக்கி கீளெ விளுகுறதுக்கு முந்தி, நானு
அதெ மடிப்பு மேலெ விளுகவிட்றென்.

16. Now I take the seal and having wetted it press it on the wax.

இப்ப நானு முத்திரையெ எடுத்து, நனெச்சு
அரக்கி மேலெ வச்சு அமுக்குறென்.

17. By this means an impression is left on the wax so that if anyone breaks it the fact can be detected at once.

இப்பிடிச் செய்யிரதுனாலெ அங்கெ ஒரு
அடையாளம் விளுந்துரும். ஆராவது அதெ
தொறந்துருந்தா ஒடனெ கண்டுபுடிச்சிரலாம்.

18. I hold the sealing wax in my left hand and the seal in my right.

அரக்கெ ஏம்பீச்சைக் கையிலியும், முத்திரையெ
ஏஞ்சோத்துக் கையிலியும் புடிக்கிறென்.

1. He always pays promptly.

எப்பவும் அவென் தவறாமெ பணங்குடுக்குறான்.

2. They never come to my house

ஏன் வீட்டுக்கு அவுங்க, எப்பவும் வர்றதில்லை

3. I will tell him about it sometime.

எப்பவாவது நானு அவெங்கிட்ட அதைப்பத்தி சொல்லுவென்.

4. He gets angry whenever he sees me.

என்னியெப் பாக்குற போதெல்லாம் அவனுக்கு ஏன் மேலெ கோவம் வருது.

5. They go to work every day.

ஒவ்வொரு நாளும் அவுங்க வேலைக்குப் போறாங்க.

6. I shall go to Madras some day.

என்னைக்காவது ஒரு நாளைக்கு, நானு பட்டணத்துக்குப் போவென்

7. Where does he live ?

அவென் எங்கெ குடியிருக்கான்

8. There is water everywhere this season.

இந்தக் காலத்துலெ, எங்கெ பாத்தாலும் தண்ணிருக்கு.

9. I have not seen him anywhere

நானு அவனெ எங்கெயும் பாக்கலெ.

10. I have left my stick somewhere.

ஏங்குச்சியெ நானு, எங்கேயோ வச்சுட்டேன்

11. I hear rumours of this wherever I go.

நானு எங்கெ போனாலுஞ்சரி, இதைப்பத்தி கேள்விப்பட்றென்

12. How do you do this ?

இதெ நிய்யி எப்பிடிச் செய்யிறெ

96

13. His work is good in every way.

எல்லா விதத்துலியும் அவன் வேலை நல்லாருக்கி.

14. It is in no way possible.

எந்த வழியிலியும் அது முடியாது. (விதத்துலியும் [illegible])

15. You must get the money somehow.

எப்பிடியாவது நீய்யி, பணத்தை வாங்கணும்.

16. I do not care however you do this.

நீய்யி இதை எப்பிடிச் செஞ்சாலுஞ் சரி.
எனக்கிப் பரவாயில்லை.

17. Noone spoke to me of this.

இதைப்பத்தி எங்கிட்ட ஒருத்தரும் பேசலை.

18. Someone is come to see you.

ஒன்னியெ பாக்கிறதுக்கி ஆரோ வந்துருக்கான்

19. Everyone likes him.

எல்லாத்துக்கும் அவன் மேலெ பிரியம்.

20 Let him hdo whatever he pleases.

~~அவன்~~ அவனுக்கி என்னென்ன செய்யிறதுக்கி
பிரியமோ, செய்யட்டும்.

21. Nothing remains to be done.

செய்யிறதுக்கி பாக்கி ஒண்ணுமில்லை.

22. Everything is now in order.

இப்ப எல்லாம் ஒழுங்காருக்கி.

23. There is something wrong with my car.

ஏன் வண்டியிலெ என்னமோ ஒரு குத்தமுருக்கி.

24 At what time will you come ?

என்னேரம் நீய்யி வருவெ.

Perfect Tense

He presumes it, but is not sure.

25. கதவை தொறந்துருக்கெ — It seems you have opened the door

26. எனக்கி சத்தங் கேட்டுருக்கு — " " I have heard the noise.

27. நானு முழிச்சிருக்கேன் — " " I have woke up.

for — க்கு

1. I find I cannot afford to pay so much for songs.

பாட்டுக்கு அம்புட்டு குடுக்க முடியாதுன்னு நெனைக்கிறேன்.

2. Draw a line in that paper.
அந்த காயிதத்லெ ஒரு கோடு போடு

2. I cannot afford to pay more than half an anna a line.

வரிக்கி அரையணாவுக்கி மேலெ குடுக்க முடியாது.

3. That includes the English translation as well as the Tamil.

அது வந்து இங்கிலீசு அர்த்தமும் தமிழ் அர்த்தமும் சேந்திருக்கு.

Very well! / all right!

4. If you like to accept very well, if not you are not obliged to do so.

ஒனக்கு அதை ஏத்துக்கிற பிரியமிண்ணு சரி. இல்லாட்டி ஒன் இஷ்டம்.

பாத்து — Carefully
Consider it carefully,

5. Think it over and see me in about a month's time.

அதைப்பத்தி நல்லா ஜோசிச்சுப் பாத்து, ஒரு மாசத்துக்குள்ளெ என்னியெப் பாரு.

a line — 'a' omitted

6. I am willing to pay you at the rate of half an anna a line.

வரிக்கி அரை ஒரணா மேனைக்கி ஒனக்கு குடுக்க எனக்கி சம்மதம்.

= from time to time

7. Come and see me every now and then.

அடிக்கடி வந்து என்னியெ பாரு.

See me often

அடிக்கடி என்னியெ வந்து பாரு

8. Hang my coat on that peg.
ஏஞ்சட்டையை அந்த மொளைக் குச்சியிலை தொங்கவிடு.

8.a If you want to say 'எத்து'. (i.e. use the word 'எத்து')
எத்துண்ணு வார்த்தை வேணுமிண்டு வச்சா.

9. Hang up the picture on the wall.
படத்தை செவத்துலை தொங்கவிடு.

gup chuppa

10. Take down that carpet from the wall.
செவத்துலெருந்து அந்த ~~சமு~~க்காளத்தை எடுத்துடு.

11. If there is a letter for me bring it back.
எனக்கு ஒரு காயிதம் இருந்துச்சின்னா கொண்டா.

i.e. when you send a servant to a house or other place.

12. If there are any letters for me bring them back.
எனக்கு என்னமாவது காயிதம் இருந்துச்சின்னா கொண்டா.

13. Does this water come from a government source to your field?
~~சர்க்கார் அணையிலெருந்து~~
இந்தத்தண்ணி ஒன் வயலுக்கு
~~வருதா?~~ வர்ற தண்ணி சர்க்கார் தண்ணியா?

14. He obtained water from a government source and irrigated his land with it.
சர்க்கார் தண்ணியெ ~~அணையிலெருந்து~~
அவென் தான் வயலுக்கு
~~தண்ணி~~ பாச்சினான்.

15. This water does not flow from the tank directly.
இந்தத்தண்ணி, கொளத்துலெருந்து
நேரா ~~பாயலெ~~ பாயிரதில்லை.

GOSPEL OF ST. MATTHEW.

மத்தேயு சுவிசேசம்.

1. II 9 When they had heard the king, they departed.

1. ராசா சொன்னதை கேட்டப்பெறகு (போது not used ordinarily) பெறப்பட்டுப் போய்ட்டாங்க.

2. II 12 When Jesus had heard that John was cast into prison, he departed into Galilee.

2. யோவான் ஜெயிலுலை போட்டுட்டாங்கன்னு சேசுவானவரு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்கு பெறப்பட்டுப் போயிட்டாரு.

3. V 21 You have heard what was said by those of old times.

3. மின்னுக்காலத்து மனுசரு சொன்னதை நீங்க கேள்விப்பட்டுருக்கிறீங்க.

4. VIII 28 When he had come to the other side of the country he met two men who were possessed with devils.

4. தேசத்துக்கு அந்தப் பக்கம் அவரு வந்தப்பெறகு பேய்புடிச்ச ரெண்டு மனுசரைப் பாத்தாரு.

5. XI 17 We have piped unto you and you have not danced; we have mourned unto you and you have not lamented.

5. நாங்க ஒங்ககிட்ட வந்து கொளலு ஊதுனோம். நீங்க ஆடலை. ஒங்ககிட்ட வந்து அளுதோம். அது நீங்க பொலம்பலை.

6. XIII 43 When the unclean spirit has gone out of a man, he walketh through dry places.

6. பேயிவந்து ஒரு மனுசனை விட்டுப் போனப்பெறகு அவன் காஞ்சதரை வளியா நடக்கிறான்

7. XIX 27 Behold, we have forsaken all and followed thee.

7. பாத்தீங்களா? நாங்க எல்லாத்தியும் விட்டுப்புட்டு ஒங்களை பின்பத்துறோம்.

8. XXI 12 These last have worked for only one hour.

இந்த கடேசியா வந்தவங்க, ஒருமணி நேரம் மாத்தரம் வேலை செஞ்சிருக்காங்க.

9. XXI 13 You have made it a den of thieves.

~~[illegible]~~ நீங்க வந்து அதை கள்ளரு கொகை-யாக்கிருக்கிறிங்க.

10. XXV 21 You have been faithful over a few things, I will make you ruler over many things.

நீயி வந்து கொஞ்சத்துலெ உண்மையா-இருந்திருக்கிறெ. நானு ஒன்னியெ ரொம்ப காரியத்துக்கி அதிகாரியாக்கிவேன்.

11. XXV 40 Inasmuch as you have done this unto the least of these my brethren, you have done it unto me.

ஒன் சகோதரருலெ ரொம்ப சின்னவனுக்கி நீங்க என்னு செஞ்சிருக்கிறிங்களோ, அதை எனக்கி செஞ்சிருக்கிறிங்க.

12. XXVI 65 Then the high priest said, ' he has spoken blasphemy '.

அவரு தேவதூஷணம் பேசுனாருன்னு பெரிய பூசாரி சொன்னான்.

13. XXVII 4 I have sinned, in that I have betrayed an innocent man.

வஞ்சகமில்லாத மனுசனை நானு காட்டிக் கொடுத்துனுலெ பாவஞ் செஞ்சேன்.

14 XXVII 19 I have suffered many things this day in a dream because of him.

அவராலெ நானு இன்னைக்கி கெனவுலெ ரொம்பப்பாடு பட்டேன்.

Perfect form used. 1, 2, 4, 5, 6, 7, 12, 13,
Perfect form not used - 3, 8, 9, 10, 11.

‡ Denotes, entered in Note-books.

SENTENCES ABOUT THE GARDEN.

1. Take the plants out of this bed and then manure it.

✓ இந்தப் பாத்திலெருந்து ~~நாத்து~~ செடிகளை எடுத்துப்புட்டு, அப்பரம் பாத்திக்கி ஒரம் போடு. ‡

Aux புட்டு
எடுத்துப்புட்டு

2. Mr Smith has some good ~~pansy~~ pansy seedlings.

✓ ஸ்மித் தொரெ வந்து கொஞ்சம் நல்ல கண்ணு நாத்து வச்சிருக்கான். ‡

Verb. வை

3. He is going to plant them out this week.

✓ இந்த வாரம் அதுகளை நட்டு-வைக்கப் போறான். ‡

Verb. plant out
நட்டுவைக்க

4. He says he will not want all of them and that I may have what is left over.

✓ அதெல்லாம் அவனுக்கி வேணுமாம். மிச்சமிருந்தா என்னியெடுத்துக்-ரச் சொல்லிருக்கான். ‡

5. I will tell you when to call for them.

✓ அதுகளை எப்ப கொண்டுபோக-ப் போலாம்ன்னு ஒனக்கி சொல்றேன்.

Indirect Question

6. Plant them out here and there round the rose trees.

✓ ரோஜாச் செடிகளைச் சுத்தி அதுகளை ~~இங்கெ~~ நட்டு. (இங்கெயும் அங்கெயும்)

here & there?

7. Where did you get these seedlings ?

✓ இந்தக் கண்ணு நாத்துக ஒனக்கி எங்கெ அகப்பட்டுச்சு.

8. They were raised in the Govt House gardens.

சர்க்காரு வீட்டுத் தோட்டத்துலெ ~~உண்டாக்கினாங்க.~~
உண்டாச்சு.

9. You have sowed these seeds too thickly. There should have been enough for the whole bed.

நீயி இந்த வெதெகளெ ரொம்ப நெருக்கமா வெதெச்சுட்டெ.
இந்தப் பாத்தி பூராவுக்குமே இது போதுமே!

10. You should have spread them about more.

இதுகளெ நீயி கொஞ்சம் விசாலமா வெதைச்சிருக்கணும்

11. Sir! There were not enough seeds.

தொரெகளே! வெதை பத்தாமெருந்துச்சுங்க.

12. That is not so. Mr Smith only had four packets of seeds and they were quite enough for a big bed.

அப்பிடியில்லெ. ஸ்மித்து தொரெ கிட்ட வந்து, நாலு பொட்டணம் வெதை மாத்தரமிருந்துச்சு. அது வந்து ஒரு பெரிய பாத்திக்கி சரியாருந்துச்சு.

13. You must be more careful with the seeds. They are very expensive.

வெதையெப்பத்தி நீயி ரொம்ப ஜாக்ரதெயாஇருக்கணும். ஏன்னா வெலெ ஜாஸ்தி.

14. Sir! I will be more careful in future.

தொரெகளே! இனிமேலு நானு ரொம்ப ஜாக்ரதெயாருக்கறேங்க.

I Denotes entered in note books | Eng. Perfect = Tamil Perf. 7.22, 23 | PERFECT. 100.

Continuous action
(1) at a moment 1.
(2) over a limited period 2, 8.

not Perf in Tam 9. 18. 11.

Present intention. 1. One day while he was grazing cattle in the forest they say he found a ~~jewel~~. treasure. — [illegible]

2. The treasure which he had hidden in a crevice of the rock. — [illegible]

[= which he was keeping] — [illegible]

3. The treasure which he had hidden. — [illegible]

4. Have I said that correctly? — [illegible]

4. A. cf 9-18 (just before) of 2 or 3 months ago — [illegible]

5. I have read that ~~[illegible]~~ several times. — [illegible]

6. Have you heard the latest news about the war? — [illegible]

7. The Germans have crossed the Rhine. — [illegible]

= have been across till now.

‡ Dative.

8. I once had a copy of it. — [illegible]

9. But you have just told me that . . . — [illegible]

10. How many chapters have we left. — [illegible]

11. He says that the villagers have come. — [illegible]

12. I have decided not to buy the house. (decision made some time ago) — [illegible]

13. I have bought some plantains. நான் கொஞ்சம் வாழைப்பழம்
(some time past) வாங்கியிருக்கிறேன்.

Single act

14. The Syrians had captured சீரியாக்காரர் வந்து இஸ்ரவேல்
and brought out of Israel தேசத்திலிருந்து ஒரு சின்னப்
a little maid. பெண்ணை சிறைபிடித்துக் கொண்டு
{The verb 'to bring' covers a வந்திருந்தார்கள்.
{space of time, up to the time postulate. Single act ?

15. He has sent this man to me அவன் வந்து இவனை
(some time ago) அனுப்பியிருக்கிறான்.

Single act

16. There have come to my எப்பிராயீம் மலையிலிருந்து
master from Mount Ephraim தீர்க்கதரிசிகளின் புத்திரரில்
two young men of the sons இரண்டு வாலிபர் என் எசமானிடத்தில்
of the prophets. வந்திருக்கிறார்கள்.
15 ? Single act

17. He hath heard your அவர் உங்கள் முறுமுறுப்பைக்
murmurings. கேட்டிருக்கிறார்.

18. I have heard your நீங்கள் முறுமுறுத்தது எனக்குக்
murmurings. கேட்டது.

cf 17

19. You have brought us forth. நீங்கள் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்.

20. I have married a wife நான் ஒரு பெண்ணைக் கட்டிக்
and therefore I cannot come. ~~இ~~ கொண்டிருக்கிறேன்
அதினாலே வரக்கூடாது.

21. I have bought five yoke ஐந்து ஏர்மாடு
of oxen. cf. 13. வாங்கியிருக்கிறேன்.
20 Single act

22. For the crowd was so great. ஜனங்கள், கூட்டமாக
In a narration in Past + இரு. வந்து, அப்படி சனம் நிறைந்
திருந்தது.
period of time = has been ? was
Continuous

23. He always lived among இவன் வந்து, எப்பவும்
the tombs. கல்லறையிலே தான் குடியிருந்திருக்கிறான்.
In a narration in Past + இரு.
period of time Continuous
குடியிருந்தான் is a single verb

not Perf. in Tamil
2, 4, 5, 6, 16, to 20.

'Coming', 'going' are verbs of motion & do not ordinarily take a Perfect? cf no. 16

'Come'
Coming is an act completed at a specific moment, 'going' is not so.
'going' வந்துருக்கு

1. What have you got in your hand?
(not a perfect.)
உங்க கையிலெ என்ன இருக்கு

2. A letter. It has just come from Mr. Smith.
ஒரு காயிதம். இது இப்பத்தான் ஸ்மித்து தொரைகிட்டெருந்து வந்திருக்கு

3. What does he say?
அவரு என்னு சொல்றாரு

4. He says his father has just died.
அவுங்கயா வந்து இப்பத்தான் செத்துப்போயிட்டாருன்னு சொல்றாரு.

செத்துப்போயிட்டார

5. The mist has lifted & we can see the hills clearly
மஞ்சி மூட்டம் கலைஞ்சிருச்சு: இப்ப நம்ம மலையை நல்லா பாக்கலாம்

கலைஞ்சிருச்சு, single act

6. The mist has come up
மஞ்சி மூட்டம் வந்துருச்சு.

வந்துருச்சு single act

7. How many times have you been doing that?
எத்தினை தரம் அதெ செஞ்சுவந்திருக்கீங்க?
(isolated actions at intervals.)

And are you still doing it
How many times did he do it (yesterday?)

PERFECT.

8. Is the knife all right?
இது சரியாயிருக்கா?

9. No. It is broken.
இல்லை. அது ஒடிஞ்சிருக்கு.

= State

10. Break the knife.
கத்திய ஒடை.

11. It is broken (now after trying to break it.)
இது ஒடைஞ்சிருச்சு.

= action

12. Where is the child?
பிள்ளை எங்கெ?

13. The child has gone to the shop.
பிள்ளை கடைக்குப் போயிருக்கு.

14. Has the child gone or not
[when the child has been told to go, to ascertain whether it has gone or not.]
போயிடுச்சா போகலியா?

15. The child has gone.
பிள்ளை போயிடுச்சு.

16. [A servant comes before you.]
Where have you been?
எங்கெ போனெ.

17. I have been to market.
நான் சந்தைக்குப் போனேன்.

18. Have you bought anything?
ஏதாவது வாங்கினியா?

19. Yes. I have bought a measure of rice.
ஆமா. ஒரு படி அரிசி வாங்கிருக்கேன்.

20. Have you bought anything else?
வேறெ ஏதாவது வாங்கினியா?

21. No. I have not bought anything else.
இல்லை வேறெ ஒண்ணும் வாங்கலெ

ANOTHER USAGE CHALLENGED

TO THE EDITOR OF THE MAIL.

SIR,—I was pleased to see in your issue of the 1st inst. Dr Maclean's letter with reference to the use of the word "Birthday." I agree with him. But, I, too, was a teacher of English, and I wish he had called attention to a far more serious and a far more prevalent mistake:—the misuse of the pluperfect or past perfect. This tense *often* is used in place of the past and never should be used unless to denote or imply an action preceding in time another action taking place in the past. For instance, "When I saw you I had been to the bazaar," or turning it around but retaining the same sense, "I had been to the bazaar when I saw you." Here the action of going precedes in time the action of seeing and should be in the past perfect tense. The action of going to the bazaar stated alone and without any relation to anything else should be put in the simple past:—"I went to the bazaar," or in the perfect:—"I have been to the bazaar." I trust your paper may give heed to this also.

C. A. DE BRUIN.

The Mail
9-12-40

See Arden p. 148 &c.
§§ 560, 561.

ENLIGHTENMENT SOUGHT

TO THE EDITOR OF THE MAIL.

SIR,—In his letter to *The Mail* of the 9th of December, Mr De Bruin refers to a common mistake which Indians commit in speaking English, when they use a pluperfect instead of a simple past tense. The converse of this is found in such a common 'howler' as 'He is working in the Collector's office since ten years.' Here a present tense is wrongly used instead of an incomplete perfect. Both these howlers are due to false analogy. There is a fine collection of such perversions of the English language in the chapter on 'Style in notes and drafts' in the *District Office Manual*, the work of Sir A. Loftus-Tottenham. I have often thought that they would be of great value to illustrate a Tamil grammar for the use of Englishmen learning Tamil.

We use the perfect in English when we describe an act or state which has taken place or existed before the time postulated in the main narrative. The Tamil does not use a perfect form with the same frequency as English to express this meaning. He does not ordinarily use a perfect, either as a principal verb or a verb in a dependent clause, to describe an act which was completely performed previous to the time postulated. Thus he would not use a perfect in the following sentences,

1. We have piped unto you and ye have not danced.
2. I have betrayed an innocent man.
3. I have suffered many things because of him.
4. He has just come.

But when an action or state prior in time to the time postulated continues in operation or effect up to that time, we use a perfect form in Tamil. For example,

1. You have heard (and you are still hearing) what was said by them of old time.
2. These last have worked (up to this moment) for only one hour.
3. Ye have made it a den of thieves (and it continues to be so).
4. You have been faithful (and still are) over a few things.

A further difficulty is that Tamil sometimes uses a perfect form while in English we do not. In the course of a narrative in which all the verbs are in the past tense, we may be suddenly startled by coming across a verb in the present-perfect. For example, in the sentences, 'We left Cannanore at 6 a.m. Half way up the Vayittri Ghaut we had engine trouble,' one would hardly expect the second verb to exhibit the form of the present perfect, and yet it is so! Perhaps some of your grammatically-minded readers would be kind enough to tell me where to go for enlightenment on these problems or to confirm my suspicions that no one has so far attempted a complete explanation.

PERCY MACQUEEN,
Mossybank,
Ootacamund.

The Mail.
23-12-40.

Caldwell –

p. 377 "In ordinary colloquial Tamil there is but one verbal participle, that of the past tense". . . . In this particular, therefore, colloquial Tamil may be considered as the poorest of the Dravidian Dialects".

Perfect, in English.

Part: + ~~S~~ . 80/3 81/1 82/1
84/9, 85/8, 12, 13 87/6
91/5 94/11 96/25, 26, 27
6*/14, 10/4 12/4 17/10 23/8 24/13

References in this book, pp. 77/5, 6, 13
80/3, 11 ; 81/1 ; 82/1 ; 84/9 ; 85/8, 12, 13;
86/6, 15, 16 ; 87/6 ; 91/5 ; 92/5, 6, 17 ;
94/11 ; 96/10, 25, 26, 27 ; 98/2, 3, 4, 5, 6, 7 etc. ;
99/9.

pp. 100, 101, 102, 103, 104.
5/13 ; 6/13, 14, 16, 17 ; 10/4 ; 11/9 ; 12/4 ;
17/10 ; 23/8, 16 ; 24/9, 12, 13, 15 ; 38/5 ;
39/2 ; 40/1 ; 42/4 ; 46/1, 5, 10 ; 49/4, 10 ;

Particularly p. 96/ 25, 26, 27

Incomplete Perfect
pp. 5/13 ; 23/8 ;

Perfect in Conditional Clause
pp. 18/ 3, 4, 7, 8, 9, 10 ; 25/6, 10 ;

// Caldwell p. 387.
"Tamil, being destitute of a present-verbal participle, uses the preterite verbal participle instead, in consequence of which, in a Tamil sentence, the question of time is in abeyance till it is determined by the tense of the final governing verb". Is it really preterite?

— p 410.

"It is unnecessary to enter into an investigation of the Dravidian compound tenses, inasmuch as in all the dialects, except the Tulu & Gond, they are formed in the simplest possible manner, by suffixing the various tenses of the substantive verb to the verbal participles of active verbs. Thus 'doing I was' (x) will represent the imperfect (also 'doing I came'); 'doing-keeping (i.e. keeping a doing) 'I was', a more continuative imperfect; 'having done I am', the perfect; 'having done I was', (x) the pluperfect; 'having done I shall be', the future perfect."

(x) The form of these in Tamil, is identical!

1. Have I written this correctly? (Shows, just after writing)

இதை நான் சரியாக எழுதியிருக்கிறேனா?

2. How many years have you been in government service?

(if retired) ~~[illegible]~~ எத்தனை வருஷம் சர்க்காரு உத்தியோகத்தில் இருந்திருக்கிறீர்.

(Still in service) இருக்கிறீர்.

(1) If retired long period in past
(2) If still in service long period continuing up to present.

All passive:

3. A garden has been made

தோட்டம் போட்டிருக்கு.

4. Firewood has been bought

விறகு வாங்கியிருக்கு.

5. The plank has been planed.

பலகை இழைத்திருக்கு.

cf 'has' Trans:
'has been' Intrans:

6. A letter has been written

காகிதம் எழுதியிருக்கு.

7. A letter has been sent

காகிதம் அனுப்பியிருக்கு.

8. For no reason a tally has been made

[illegible]

meaning of this verb?

6. Have you found anything?

— கண்டுபிடிக்கவில்லையா / என்னமாவது கண்டுபிடித்திருக்கிறீர்களா

not necessarily to find the real culprit

to find the ~~[illegible]~~ real culprit

7. The rain has stopped.

மழை நின்றிருக்கு. for the time being

மழை நின்னுது. It has completely stopped

8. Has the rain stopped?

மழை நின்னிச்சா?

temporary in results? but it may start again

9. My son has gone to Kodai.

என் மகன் கோடைக்குப் போயிருக்கான்

(he will come back again)

என் மகன் கோடைக்குப் போயிட்டான்.

(he won't come back)

went off to?

10. பாளையங்கோட்டையிலே எத்தினை வருஷம் இருந்தே

போஸ்ட்டாபீசிலே எத்தினை வருஷம் இருந்தே

How many years were you in the Palamcottah "Post office"

if related & part of same speech in Post office

11. இந்த மொத்தம் சர்க்கார் உத்தியோகத்துலே எத்தினை வருஷம் இருந்திருக்கே

How many years altogether have you been in government service?

12. Have you heard? கேள்விப்பட்டியா?

I have written a book. ஒரு பொஸ்தகம் எழுதியிருக்கேன்

13. Did you know? I have composed a song. உனக்கு தெரியுமா? ஒரு பாட்டு கட்டியிருக்கேன்.

14. The tiger bit the bullock. (The speaker saw it himself)

14. புலி மாட்டை கடிச்சிச்சு.

15. " (The speaker repeats hearsay)

15. புலி மாட்டை கடிச்சிச்சாம்.

16. " (The speaker did not see the actual biting, but saw the bullock afterwards)

16. புலி மாட்டை கடிச்சிருக்கு.

17. " (The biting was a bad one)

17. புலி மாட்டை கடிச்சிருக்குச்சு.

18. (The speaker did not see it)

18. புலி மாட்டை கடிச்சிருக்கு கடிச்சிருக்கு.

Clayton – 3rd ed. 1939. p. 146. § 249.

p "To express the completion of an act in past, present or indefinite time, the past, present or future of இருக்க is added to the last verbal participle. நான் புசித்துக்கொண்டு இருக்கிறேன், அவன் [illegible] இருப்பானோ? Arden calls such tenses 'combinate forms' of the tenses. But it should be noted that the perfect and pluperfect tenses in English are often fully expressed by the simple past in Tamil. So it is not always necessary that 'I have seen' or 'I had seen' should be expressed by பார்த்திருக்கிறேன் and பார்த்திருந்தேன் respectively. The past tense in Tamil often implies the completed action.

§ 250. The forms பார்த்திருப்பான் express a supposition or likelihood. ~~This~~ tense is called the future perfect. Pope §§ 79, 80, 81
Arden (revised) 560 ff."

He says "the past tense in Tamil <u>often</u> implies the completed action".

(i) He does not tell us how often.

(ii) 'Completed action' is not very good. A perfect is an action perfect or completed in respect of a postulated point of time.

UNIVERSITY LIBRARY, 1 APR 1940 MADRAS.

Nesfield p. 60.

"To each tense there are four different forms:—

I Indefinite . . .

II Continuous . . .

III Perfect; which denotes that the event (in Present, Past or Future time) is in a completed or perfect state; as, "I have loved", "I had loved", "I shall have loved".

IV Perfect Continuous; which combines the meaning of the two preceding forms; as, "I have been loving", "I had been loving", "I shall have been loving"."

(*) Actually the Perfect Continuous sometimes takes the form of the perfect, 'I have lived here for ten years.'

= Lemmi's Italian Grammar, pp. 132, 133.

"The Preterite is used in speaking of a past action, completed at a period quite past, and of which no part remains unexpired, so that this tense cannot be used in speaking of today, this week, this year.

. . .

The Past or Preterite Indefinite is used in speaking of a past action, without determining the time in which it happened.

Ex

Abbiamo dimorato un anno in Boemia. — We have resided a year in Bohemia.

Mi ha mostrato una rara collezione di farfalle — He showed me a rare collection of butterflies.

It is also used when the action has taken place in a period of time not completely elapsed

Ex Io ho avuto un abboccamento questa mattina col console — I had an interview this morning with the consul.